பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 11 2024 **SUNDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜார்க்கண்டில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

2. மஹாராஷ்ர மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் இன்று மும்பையில் வெளியிடுகின்றன.

3. இந்திய ராணுவம், கப்பற்படை, விமானப்படை இணைந்து நடத்தும் பூர்வி பிரஹார் என்ற போர் பயிற்சிகள் இன்று தொடங்குகின்றன.

4. உலக அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. இத்தாலியில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrela Das** பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் சூடு பிடித்துள்ளது.

பிரதமரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. நரேந்திர மோடி, இன்று அங்கு நடைபெறும் இரண்டு தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றுகிறார்.

பொக்கோராவில் மதியம் ஒரு மணியளவில் நடைபெறும் முதல் கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

பிற்பகல் 3.15 மணியளவில் கார்வா-வில் நடைபெறும் கூட்டத்தில் பேசுகிறார்.

மாலை 5.15 மணியளவில் ராஞ்சியில் நடைபெறும் தேர்தல் பேரணியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் திரு. ஹேமந்த் சோரன், பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்கிறார்.

ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சியின் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், சாத்ராவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சரும், பிஜேபி தலைவர்களில் ஒருவருமான திரு. அமித் ஷா இன்று மும்பையில் வெளியிடுகிறார்.

அதன் பின்னர், அம்மாநிலத்தில் ஜலகான், புல்தானா மற்றும் அமராவதியில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை மும்பையில் வெளியிடுகிறார்.

>>>>>><<<<<<

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொதுத்துறை வங்கிகள் இந்த நிதியாண்டில் 5 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தேசிய சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பில் பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், இந்த துறைக்கான கடனுதவி 9 புள்ளி இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதுவரை தனியார் வங்கிகள் 25 சதவீதம் கடன் வழங்கியுள்ளதாகவும் அதேநேரத்தில் பொதுத்துறை வங்கிகள், 39 சதவீதம் அளவிற்கு கடனுதவிகளை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடன் காப்புரிமை திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் வரை கடனுதவி வழங்க அடுத்து நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் டிவெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து 25 சதவீதம் அளவிற்கு பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசு துறை நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியதன் அடிப்படையில், இத்துறை மேலும் வளர்ச்சியடைந்துள்ளதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தில் தென்காசி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

முத்ரா திட்டத்தின் கீழ், தற்போது 10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்ட நிலையில், சிறு குறு தொழிலாளர்களின் நலன் கருதி 20 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க முன்வந்துள்ளதற்கு மத்திய அரசுக்கு தொழில் முனைவோர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

>>>>>><<<<<<

திரைப்படத் தயாரிப்பு மற்றும் ஊடகங்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 55வது சர்வதேச இந்திய திரைப்பட விழா மற்றும் ஃபிலிம் பஜார் 2024 உலக ஒலி – ஒளி பொழுதுபோக்கு மாநாடு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இதன் மூலம் சர்வதேச அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புதிய ஒலிபரப்புக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் சோப்பூர் நகரில், பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டான்.

பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது, தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, அப்பகுதியை சுற்றி வளைத்த போது, தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர்.

இரண்டுக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் அப்பகுதியில் இன்றும் பதுங்கியிருக்கக்கூடும் என்ற அடிப்படையில் பாதுகாப்புப் படையினர தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இந்திய ராணுவம், கப்பற்படை, விமானப்படை இணைந்து நடத்தும் பூர்வி பிரஹார் என்ற போர் பயிற்சிகள் இன்று தொடங்குகின்றன.

இப்பயிற்சி இன்று முதல் வரும் 18ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

முப்படைகளின் போர்த் திறனை ஒருங்கிணைக்கும் விதத்தில் இந்தப் பயிற்சியானது நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில் **Chinuook** இலகு ரக ருத்ரா ஹெலிகாப்டர்கள், **Howitzer** ரக பீரங்கிகளும் ஈடுபடுத்தப்படுகின்றன.

>>>>>><<<<<<

உலக அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

எதிர்காலத்தை கட்டமைப்பதில் அறிவியிலின் பங்கு என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, சமூக வளர்ச்சியில் அறிவியலின் பங்கு என்பதை விளக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும், அன்றாட வாழ்க்கையில் அறிவியிலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதத்தில் இந்த தினத்தை கடைபிடிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ கேட்டுக் கொண்டுள்ளது.

முதலாவது உலக அறிவியல் தினம் 2001ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் தேதி யுனெஸ்கோவால் கொண்டாடப்பட்டது.

அறிவியல் கண்டுபிடிப்புகளானது வறுமையிலிருது விடுபடுவது, சுற்றுச்சூழல் பாதிப்புகளை எதிர்கொள்வது, சுகாதாரத்துறையில் உள்ள சவால்களை சமாளிப்பது என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என்று யுனெஸ்கோ வலியுறுத்துகிறது.

இந்நாளையொட்டி, அறிவியல் துறை சார்ந்த நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

>>>>>><<<<<<

பிரபல திரைப்பட நடிகர் திரு. தில்லி கணேஷ், உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் காலமானார். அவருக்கு வயது 80.

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் 400க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.

நடிப்பு மட்டுமின்றி சிறந்த டப்பிங் கலைஞராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவிற்கு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

(சவுண்ட் பைட் - தில்லி கணேஷ் 35 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் முகாம்களில் வாழும், இலங்கைத் தமிழர்களுக்கான உணவு தொழில் முனைவோர் சிறப்பு பயிற்சி முகாம் சென்னையில் நடைபெற்றது.

தமிழகத்தில் பல்வேறு முகாம்களில் வசிக்கும், இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, தொழில்முனைவோர்களாக செயல்பட உதவும் விதத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பில் குறுங்கடன் திட்டம் அமல்படுத்தப்படவுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, சென்னையில் சிறப்பு தொழில் முனைவோர் பயிற்சியானது, கடந்த மூன்று நாட்கள் நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர் முகாம்களில் செயல்பட்டு வரும் 800 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 10 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதியும், தொழில் பயிற்சியும் வழங்கப்பட்டு வருவதாகவும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 10 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூலம் இந்த முன்னெடுப்பு செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

**>>>>>><<<<<<**

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் ரயில் நிலையத்தில் நிகழ்ந்த தற்கொலைப்படை தாக்குதலில் 25 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு பலுசிஸ்தான் விடுதலைப் படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 14 ராணுவ வீரர்கள் உட்பட பொதுமக்கள் சிலரும் உயிரிழந்துள்ளனர்.

**>>>>>><<<<<<**

இத்தாலியில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrela Das** பட்டம் வென்றார்.

**>>>>>><<<<<<**

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள **Gqeberha** வில் உள்ள **St. George park** மைதானத்தில் இப்போட்டி இன்றிரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 61 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் மூன்றாவது போட்டி, வரும் புதன்கிழமை அன்று செஞ்சூரினில் நடைபெறுகிறது.

நான்காவது மற்றும் இறுதிப்போட்டி வரும் வெள்ளிக்கிழமை ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெறவுள்ளது.

**>>>>>><<<<<<**

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நடைபெற்ற பாரா க்ளைடிங் போட்டியில், அமெரிக்காவின் **Austin Cox** அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை வென்றார்.

இந்தியாவின் **Ranjit Singh** இரண்டாவது இடத்தை பிடித்தார். போலந்து நாட்டின் **Dominik Kapica** மூன்றாவத இடத்தை பெற்றார்.

**>>>>>><<<<<<**

அரியலூர் மாவட்ட குத்துச்சண்டை சங்கத்தின் சார்பில் மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது.

இதில் அரியலூர், தஞ்சாவூர், கரூர், திருச்சி உள்ளிட்ட 19 மாவட்டங்களைச் சேர்ந்த 160 வீரர்கள் மற்றும் 60 வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

14, 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 17 வயதுக்கு மேற்பட்டோர் என்ற மூன்று பிரிவுகளில் இந்தப் போட்டிகள் தனித்தனியாக நடைபெற்றன.

இன்று தேசிய அளவிலான தொழில்முறை குத்துச்சண்டை வீரர்களுக்கான போட்டிகள் நடைபெறுகின்றன.

**>>>>>>END<<<<<<**